## இயல்பான விசாரணை நடைமுறைகளைத் தாண்டி-

# சித்ரவதைக் கூடங்களாக மாறும், அமலாக்கப் பிரிவு அலுவலகங்கள்!

*சென்னை, ஜூலை 21-*

நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு, 2014-இல் ஒன்றிய ஆட்சியதிகாரத்தில் அமர்ந்த பின்பு, அரசியலமைப்புச் சட்ட நிறுவனங் கள் பலவும் அதன் மதிப்பிழக்கச் செய்யப்பட்டு விட்டன.

குறிப்பாக, வருமான வரித்துறை, சிபிஐ, அமலாக்கத்துறை போன்றவை, எதிர்க் கட்சிகளை மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களை, மிரட்டிப் பணிய வைப்பதற்கான பாஜகவின் அர சியல் சித்ரவதைப் பிரிவுகளாக மாற்றப்பட்டு விட்டன. 70 வயதைக் கடந்த காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் ஆகியோரிடம் பல மணி நேரம் விசாரணை நடத்திய அமலாக்கத் துறை, 80 வயதைக் கடந்த தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாருக்கும் குறிவைத்தது. அவர் சம்மன் இல்லாமலேயே அமலாக்கத் துறை அலுவலகத்திற்கு புறப்பட, அவசர அவசரமாக, நாங்கள் அழைக்கும்போது வந்தால் போதும் என்று பின்வாங்கியது.

85 வயதாகும் நாட்டின் மூத்த தலைவரும், ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லாவையும் அமலாக்கத் துறை விடவில்லை. சமாஜ்வாதி மூத்த தலைவர் ஆசம் கான். மக்கள் 75 வயதை எட்டியவர். தொடர்ந்து 9 முறை எம்.எல்.ஏ.-வாக வெற்றி பெற்ற மக்கள் செல்வாக்கைக் கொண்டவர். இவரை பலமுறை அமலாக்கத் துறை வாட்டி எடுத்தது. இப்படி நாடு முழுவதும் அமலாக்கத்துறையால் வேட்டையாடப்படும் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஏராளம்.

அந்த வகையில்தான், 72 வயதைக் கடந்த ஒருவரை, அதுவும் தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சராக இருப்பருவமான க. பொன்முடியை, விசாரணை என்ற பெயரில் அமலாக்கத்துறை இரண்டு நாட்களாக பல மணிநேரம் சித்ர வதைக்கு உள்ளாக்கியிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தமிழ்நாடு உயர் கல்வித் துறை அமைச்சர் க. பொன்முடி, அவரது மூத்த மகன் கவுதம சிகாமணி ஆகியோருக்குச் சொந்தமான சென்னை, விழுப்புரம் பகுதிகளில் உள்ள 8 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த ஜூலை 17 அன்று சோதனை நடத்தி இருந்தனர். 2006 முதல் 2011 திமுக ஆட்சிக் காலத்தில் பொன்முடி கனிமவளத் துறை அமைச்சராக இருந்தார். அப்போது பொன்முடி, தனது பதவி யின் மூலம் அவரது மகன் கவுதம சிகாமணி மற்றும் உறவினர்கள் முறைகேடாக செம்மண் குவாரி களில் அளவுக்கு அதிகமாக மண் எடுத்ததன் மூலம், அரசுக்கு 28 கோடியே 37 லட்சத்து 65 ஆயிரத்து 600 ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்படுத்தி யதாக பொன்முடி, மகன் கவுதம சிகாமணி, உறவினர் ஜெயச்சந்திரன் உள்ளிட்டோருக்கு எதிராக விழுப் புரம் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறை வழக்கு பதிவு செய்திருந்தது.

11 ஆண்டுகளுக்கு முந்தைய இந்த வழக்கில் தான், சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அமைச் சர் பொன்முடி வீடு, அவரது மகன் கவுதம சிகாமணி எம்.பி.யின் வீடுகளில் ஜூலை 17 அன்று காலை 7 மணி முதல், சிஆர்பிஎப் வீரர்களின் துணையோடு அமலாக்கத் துறை சோதனையில் ஈடுபட்டது.

அப்போது, சைதாப்பேட்டையில் பொன்முடி வீட்டில் நிறுத்தி வைத்திருந்த காரிலிருந்து முக்கிய ஆவணங்களையும், சென்னை வீட்டில் இருந்து கணக்கில் காட்டப்படாத சுமார் 70 லட்சம் ரூபாய் பணம் மற்றும் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான வெளிநாட்டு கரன்சிகளை பறிமுதல் செய்ததாகவும் தெரிவித்த அமலாக்கத் துறை அதிகாரிகள், பொன்முடியின் வங்கி இருப்பில் வைத்திருந்த 48 கோடி ரூபாயையும் முடக்கி வைத்துள்ளதாக அறிவித்தனர். காலை 7 மணிக்குத் துவங்கி 13 மணிநேரம் சோதனை நடத்திய அமலாக்கத் துறை அதிகாரிகள், அதன் பின்னர், இரவு 10 மணியளவில் அமைச்சர் க. பொன்முடியை, சி.ஆர்.பி.எப். பாதுகாப்புடன் நுங்கம்பாக் கம் சாஸ்திரி பவனில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு, கைப் பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பணம் தொடர்பாக அதிகாலை 3.30 மணி வரை சுமார் 6 மணி நேரம் தொடர்ச்சியாக விசாரணை மேற்கொண்டு வாக்குமூலங்களை வீடியோவாக பதிவு செய்தனர். இதேபோல சைதாப்பேட்டை இல்லம் மற்றும் அமலாக்கத்துறை அலுவலகத்தில், பொன்முடியின் மகன் கவுதம சிகாமணி எம்.பி.யிடமும் அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். பின்னர் மறுநாளும் பொன்முடி, பொன்முடியின் மகன் கவுதம சிகாமணி ஆகி யோர் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டனர்.

அதன்படி செவ்வாயன்றும் மாலை 4 மணிக்கு அமலாக்கத் துறை அலுவலகத்தில் அமைச்சர் பொன்முடி, கவுதம சிகாமணி எம்.பி. ஆகிய இருவரும் விசாரணைக்கு ஆஜராகினர்.

அவர்களிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் தயார் செய்து வைத்திருந்த 100-க்கும் மேற்பட்ட கேள்விகளைக் கேட்டு ஆம், இல்லை என பதில் கூற வைத்து, அதனை வீடியோவாக பதிவு செய்ததாக கூறப்படு கிறது. இந்த விசாரணையும், மாலை 4 மணிக்குத் துவங்கி இரவு 10 மணி வரை சுமார் 6 மணிநேரமாக நடை பெற்றுள்ளது. மீண்டும் விசாரணைக்கு அழைத்தால் ஆஜராக வேண்டுமென்ற உத்தரவோடு இருவரையும் அனுப்பி வைத்த அமலாக்கத்துறை, புதனன்று காலை கவுதம சிகாமணி எம்.பி.யை மட்டும் மீண்டும் வர வழைத்து பல மணிநேரமாக விசா ரணையைத் தொடர்ந்துள்ளனர்.

இந்நிலையில்தான், அமலாக்கத் துறையின் இந்த விசாரணை முறைக்கு கண்டனம் எழுந்துள்ளது. இயல்பான விசாரணை நடைமுறை என்பதைத் தாண்டி, ஒருவரை பல மணிநேரங்களுக்கு நீண்ட விசா ரணை என்ற பெயரில் சித்ரவதைக்கு உள்ளாக்கி, மன உளைச்சலை ஏற் படுத்துவதன் மூலம் அவரை அச்சு றுத்தும் நோக்கத்தை பின்னணியில் கொண்டிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுதொடர்பாக திமுக வழக்கறி ஞர் சரவணன் பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

“பொன்முடியை காலை 10 மணிக்கு ஆரம்பித்து, நள்ளிரவு 3.30 மணி வரை விசாரித்து இருக்கிறார்கள். அவருக்கு வயது 72. ஏற்கனவே உடலில் பல பிரச்சனைகள் உள்ளன. இப்படித்தான் அமலாக்கத் துறை மனிதாபிமானமற்ற முறையில் நடக்கிறது. 3.30 மணி வரை உட்கார்ந்து இருக்கும் நமக்கே சோர்வாக இருக்கிறது என்றால், 72 வயதான வருக்கு எப்படி இருக்கும்? எப்படிப்பட்ட ஒரு மன உளைச்சலை, உடல் உளைச்சலை இது கொடுத்திருக்கும்? இப்படி செய்யக்கூடாது என்று தான் உச்சநீதிமன்றம் பல முறை எச்சரித்து இருக்கிறது. அதற்காகவே மனித உரிமைகள் ஆணையம் உள்ளது. மனித உரிமைகளை காப்பாற்ற சட்டம் உள்ளது. ஆனால், எதைப் பற்றியும் கவலைப்படமாட்டோம். இரவு 3.30 மணி வரை வாக்குமூலம் வாங்குவேன் என்கிறார்கள்.

இதை நாளை வாங்கினால் வாக்குமூலம் மாறப்போகிறதா? ஆதாரங்கள் அழி யப்போகிறதா? 2007-ஆம் ஆண்டு வழக்கிற்கு 2023 ஆம் ஆண்டில் விசாரிப்போம் என்கிறது அமலாக்கத் துறை. அமலாக்கத்துறை அலுவலகமா அல்லது சித்ரவதைக் கூடமா? என்று தெரியவில்லை.

பொன்முடியை குறி வைப்பதற்குக் காரணம் ஆளுநர் ரவிதான். கொள்கை ரீதியாகவும், அரசு ரீதியாகவும் துணைவேந்தர் நியமனம், புதிய கல்விக்கொள்கை போன்றவற்றை ஏற்கவில்லை. சித்தாந்த ரீதியாக ஆளுநரை தொடர்ந்து எதிர்த்தவர் பொன்முடி. கடந்தவாரம் ஆளுநர் தில்லி சென்றார். மறுவாரம் அமலாக்கத் துறை வருகிறது. 2007-இல் நடந்த வழக்கிற்கு 2023-இல் எந்த ஆதாரத்தைத் தேடுகிறீர்கள். என்ன கிடைக்கும்?ஆனால், அமலாக்கத் துறை 10 ஆண்டுகள் கழித்துத்தான் தேடுவோம். 3.30 மணி வரை விசாரிப்போம் என மனித தன்மையற்ற முறையில் செயல்படுகிறது. திமுக அரசு மீது களங்கம் கற்பிக்க வேண் டும் என்றே இவர்கள் செயல்படுகிறார்கள். 2024 தேர்தலுக்காக இப்படி ஒரு மிரட்டலை செய்கிறார்கள்” என்று சரவணன் கூறியுள்ளார்.

**நன்றி – தீக்கதிர்**
**20–07–2023**

---

### காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் - குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர்

# படப்பை ஆ.மனோகரன் புதல்வர் மணவிழா வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது!

*காஞ்சிபுரம், ஜூலை. 21 -*

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் - குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன் ஆகியோரின் புதல்வர் ம. வெற்றி செல்வனுக்கும், சென்னை, கலைஞர்நகர் எச்.ஜோஸ்வா ஐசக் - கிரேஸ்லின் ஐசக் ஆகியோரின் புதல்வி ஜோ.



ஜெசிக்கா ஏஞ்சலினுக்கும் மணவிழா வரவேற்பு 23.7.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில், சென்னை, திருவான்மியூர், டாக்டர் வாசுதேவன் நகரில் அமைந்துள்ள ஸ்ரீ ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், அமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல் வாழ்த்துக்களுடன் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் தி.மு.க. - தலைமைக் கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.




நாள் : 21.07.2023 வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 04.00 மணியளவில்
நலத்திட்ட உதவிகள் வழங்கும்
இடம் : பாலு தெரு,
பழையவண்ணாரப்பேட்டை,
சென்னை – 21.





கட்பீஸ் ப.தீனதயாளன்
கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி B.E.,
சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்
ஆகியோர்களின் தந்தை
இராயபுரம் முன்னாள் பகுதி செயலாளர்
கட்பீஸ் அ.பழனி EX.MC. அவர்களின்
நான்காம் ஆண்டு நினைவேந்தல் மற்றும்
நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும்
மாண்புமிகு. பி.கே.சேகர்பாபு
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்,சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ)
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான்
சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன் துறை அமைச்சர்,
விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
தா.இளைய அருணா BE.MC
சென்னை வடக்கு மாவட்ட செயலாளர், மாநகராட்சி நகர அமைப்பு நிலைக்குழு தலைவர்
டாக்டர். கலாநிதி வீராசாமி MP
வடசென்னை நாடளுமன்ற உறுப்பினர்
எஸ்.ஜோயல்
கழக இளைஞரணி துணை செயலாளர்
J.J.எபினேசர்
ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர்
ஐட்ரீம் R.மூர்த்தி
இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர்
R.D.சேகர்
பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர்
இரா.லட்சுமணன்
ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர்
S.ஜெபதாஸ்பாண்டியன்
ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர்
ஆர்.செந்தில்குமார்
இராயபுரம் கிழக்கு பகுதி கழக செயலாளர்
வ.பெ.சுரேஷ்
இராயபுரம் மேற்கு பகுதி கழக செயலாளர்
மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள்

நீங்கா நினைவுகளுடன்
வெ.சு.சத்தியநாராயணன் B.A
துணை அமைப்பாளர்
சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி
மோ.ரவிக்குமார் B.A
துணை அமைப்பாளர்
சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி
நாட்டாமை K.லட்சுமணன்
மாவட்ட பிரதிநிதி
சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க




தலைமைச் செயலகத்தில், நேற்று (20.07.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், தேசிய நலவாழ்வு குழுமத்தின் 8 வது ஆட்சிமன்ற குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் விக்ரம் கபூர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மா.அரவிந்த், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### தா.இளையஅருணா தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

### டி.கே.எஸ்.இளங்கோவன்,என்.ஆர்.இளங்கோ, ஜி.தேவராஜன் பங்கேற்பு !

# மருதுகணேஷ் தாயார் பார்வதி நாராயணசாமி திருவுருவபடம்! ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்தார்!

### அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன் மகளிர்க்கு புடவை, மரக்கன்று வழங்கினர்!

*சென்னை ஜூலை 21-*

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.மருதுகணேஷ் தாயார் முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும், வடசென்னை மாவட்ட முன்னாள் மகளிர் அணி தலைவரும், மொழிப்போர் தியாகியுமான பார்வதி நாராயணசாமி நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா தலைமையில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று பார்வதி நாராயணசாமி அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியம், ஆகியோர் பங்கேற்று பெண்களுக்கு புடவைகளையும், மற்றும் மரக்கன்றுகளையும் வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி,ஜி.தேவராஜன், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், க.ஜெயராமன், அ.முருகன், வை.மா.அருள்தாசன், இரா.மதிவாணன், நா.மனோகரன், இரா.நரேந்திரன், பி.டி.பாண்டிசெல்வம், ஆர்.எம்.டி.ரவீந்திரன், இரா.கர்ணா, ஆர்.வெற்றிவீரன், மு.கோபி, க.நாகம்மை, வி.தயாளன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், வே.சிவகுமார், நா.சண்முகம், கி.ராஜேந்திரன், த.கமலக்கண்ணன், டாக்டர் வை.கலைவாணன், ஏ.ரமேஷ்பாபு, கட்பீஸ்.ப. சோமசுந்தரமூர்த்தி, ரெயின்போ விஜயகுமார், கா.கோவிந்தசாமி, எஸ்.யுவராஜ், லட்சுமி வேலு, விமலா மோகன், லியோ சுரேஷ் , பெரம்பூர் சதீஷ், ஆர்.பொன்இளவரசன், ப.சோம சுந்தரமூர்த்தி, மோ.ரவிக்குமார், லயோலா மதன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, கே.பி.சதிஷ்குமார், எம்.வேத.லட்சுமி, எம்.கோவிந்தராஜ், என்.லோகநாதன் திராவிடசெல்வி, கு.ரமேஷ், பி.சேகர், எஸ்.திருஞானம், ச.தமிழ்செல்வன், ப.குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், என்.கோதண்டன், எம். நாகராஜ், பொ.து.ராஜா, வி.வடிவேலு, எஸ்.எல்.சுந்தர், கே.தேவன் ஆர்.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, இரா.பாலன், சீனிவாசன், ஜி.சதீஷ்குமார்,

கொரியர் பி.முருகன், பாலா லட்சுமணன், பி.கண்ணன், மா.ரூபசங்கர், பி.கே.மூர்த்தி, வி.முத்து, எம்.எம்சாமி, ஜே.ரேஷ்பாபு, பி.அன்பழகன், டி.ஆர்.தணிகசலம், லேலண்ட் மோகன், சா.திருப்பதிசாமி, ப.ஆ.சண்முகம், எஸ்.கே.இளங்கோ, வெ.சு.சத்யநாராயணன், ஜெ.பிரேம் ஆனந்த், டி.லெனின், ஜெ.நெல்சன், எஸ்.மகேஸ்வரி, எம்.கலைவாணி, பாம்பே லஷ்மி, என்.சம்பத்குமாரி, சூரியகாந்தா, சூர்யாபிரபா, மாமன்ற உறுப்பினர்கள் பா.வேளாங்கண்ணி, ரேணுகா, காவேரி, செல்வம், மணிமேகலை ஏழுமலை, ஜி.வேலு, சைதைபாபு, வெ.சு.பிரபாகரன், ஜி.சுரேஷ் , வி.டி.ஆர்.ரவிக்குமார், எஸ்.பகவதிராஜ், கே.தேவபிரசாத், டி.மகாராஜன், தனசேகரன், ஏ வெற்றிச்செல்வன், எம்.ஜெய்சங்கர், ஜி.சீனிவாசன், பி.சீனிவாசன், பி.சுரேஷ், செந்தில், ஜே.சரவணன், பா.ஆர்த்தி, டி.சரவணன், கே.பொம்முராஜ், எஸ்.பி.எஸ்.புத்தன், எஸ்.சேகர், எஸ்.சரவணகுமார், ஜெ.தரணிதரன், எஸ்.ராஜேஷ், ஜி.கணேஷ், ஆர்.வீரமணி, ஜி.ஹரிராமன், சி.ஸ்ரீதர், எஸ்.சசிதரன், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், ஏ.கே.உமாசங்கர், எஸ்.ஜெயா வினோ ஸ்ரீதர், கே.பழனியப்பன், வி.கார்த்திக், எம்.டி.மதன்ராஜ், டி.சீனிவாசன், டி.கிருஷ்ணமூர்த்தி, ஏ.சாந்தகுமார், ஜி.கோகுல், என்.பிரேமதாசன், ஆர்.வேலுச்சாமி, எம்.ரமேஷ், கே.புருஷோத்தமன், டி.பிரபு, என்.எஸ்.வேந்தகுமார், ஆர்.சந்தோஷ், சுகன்யா சீனிவாசன், டி.தட்சிணாமூர்த்தி, எம்.யாசர்அராபத், வேளச்சேரி துரைராஜ், ரெட்ஹில்ஸ் சுதாகர், ஆர்.மகேஸ்வரன், பெரம்பூர் மோகன்ராஜ், எஸ்.பாலாஜி, எஸ்.ஆனந்த், மற்றும் பொதுமக்கள், வழக்கறிஞர்கள் பங்கேற்றனர் .

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கட்பீஸ் அ. பழனி
### ஜூலை 21 (2019)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**வடசென்னை மாவட்டம், சார்பு மன்ற நிர்வாகி, 10வது வட்ட பகுதி பிரதிநிதி, இராயபுரம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், 1996 முதல் 2016 வரை தொடர்ந்து இராயபுரம் பகுதிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**2006ல் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**